84

<u>உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,</u>
<u>மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்</u>
<u>முன்னிலை : திரு.கி.சந்திரசேகர்,B.E., M.T.P.,</u>

**ந.க.எண். 492 /2020 மாஉ.திகு.** **நாள். 13.07.2020**

பொருள் : குடியிருப்பு கட்டிடம் - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - செங்கல்பட்டு மாவட்டம் - திருப்போரூர் வட்டம் - **கானத்தூர் ரெட்டிக் குப்பம்** ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்:103/61B -ல் வரன்முறைபடுத்திய மனைப்பிரிவு SPF No:13/2020 -ல் அமைந்துள்ள மனை எண்:12 -ல் (உட்பிரிவு அளிக்கப்பட்ட மனை எண்:5-ல்) 636.35 ச.மீ பரப்பு கொண்ட மனைப்பரப்பில் S + 5 Floors 1393.47 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :

1. மனுதாரர் **M/s.Chellappas (Builders and Promoters),** அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்:10.06.2020.
2. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை நாள்.28.03.2012.
3. அரசாணை எண்18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020.
4. அரசாணை எண்.18, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 04.02.2019.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.26294/2010 எல்ஏ 2 நாள். 20.12.2010.
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019 பிஏ2 நாள்:05.02.2020
7. 168-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண்.2, நாள்.20.01.2020.
8. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண். நாள்.26.06.2020 [அபிவிருத்தி கட்டணம், நன்னிலைத் தொகை, அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், Completion Certificate கட்டணம் மற்றும் Security deposit & Display board ஆகிய கட்டணங்கள் செலுத்தக் கோரியது மற்றும் OSR கட்டணம், Premium FSI -க்கான கட்டணம் செலுத்தக் கோரியது நாள்:09.07.2020.
9. மனுதாரர் **M/s.Chellappas (Builders and Promoters),** அவர்களின் கடிதம் நாள்:13.07.2020. [அபிவிருத்திக் கட்டணம், நன்னிலைத் தொகை, அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம் மற்றும் Completion Certificate, Security deposit, Display Board, OSR Charges & Premium FSI ஆகிய கட்டணம் செலுத்தியது.

*****

65

**உத்திரவு:**

குடியிருப்பு கட்டிடம் - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - செங்கல்பட்டு மாவட்டம் - திருப்போரூர் வட்டம் - **கானத்தூர் ரெட்டிக் குப்பம்** ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்:103/61B -ல் வரன்முறைபடுத்திய மனைப்பிரிவு SPF No:13/2020 -ல் அமைந்துள்ள மனை எண்:12 -ல் (உட்பிரிவு அளிக்கப்பட்ட மனை எண்:5-ல்) 636.35 ச.மீ பரப்பு கொண்ட மனைப்பரப்பில் S + 5 Floors 1393.47 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்ட விபரம் பின்வருமாறு:

**Area Statement**

**மனையிடத்தின் மொத்த பரப்பு - 636.35 சதுர மீட்டர்**

| Floor Name | Total Buildup Area | Net FSI Area |
|---|---|---|
| Stilt Floor | 329.54 | - |
| Floor - 01 | 322.54 | 317.60 |
| Floor - 02 | 322.54 | 317.60 |
| Floor - 03 | 322.54 | 317.60 |
| Floor - 04 | 322.54 | 317.60 |
| Floor - 05 | 128.00 | 123.06 |
| **Total** | **1747.69** | **1393.47** |

| | | |
|---|---|---|
| Provided Car Parking | - | 10 No's |
| Provided Two wheeler Parking | - | 10 No's |
| Plot Coverage | - | 51.78% |
| F.S.I. | - | 2.189 |

உத்தேச குடியிருப்பு கட்டுமானம் (Residential Building) அமையும் மனையிடத்திற்கு **"ABCD"** என எல்லையிட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் அமையும் கட்டுமானங்களுக்கு, நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின் அடிப்படையில் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49-ன் கீழ் **க.வ/மா.உ.தி.கு எண். 11/2020** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50-ன் படி திட்ட அனுமதி வழங்கப்பட்ட தினத்திலிருந்து **13.07.2020 முதல் 12.07.2025 வரை ஐந்தாண்டுகளுக்கு** மட்டுமே செல்லத்தக்கதாகும்

பார்வை 7-ல் கண்ட மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் 168-வது கூட்டத் தீர்மானம் எண். 2 நாள். 20.01.2020 -ன் படியும், பார்வை - 2, 3 மற்றும் 4 -ல் கண்ட

அரசாணைகளின் படியும், பார்வை 8 -ல் கண்ட இவ்வலுவலக கேட்பு வரைவுகள் மூலம் மனுதாரிடம் வளர்ச்சிக் கட்டணம், நன்னிலை வரி கட்டணம், அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு, Completion certificate கட்டணம், Security deposit & Display board, OSR Charges and Premium FSI ஆகிய கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு கோரப்பட்டு, பார்வை 9 -ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அதற்கான கட்டணத் தொகை விபரம் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

பார்வை 8-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கோரிய கட்டணங்களை பார்வை 9 -ல் கண்ட மனுதாரர் கடிதம் மூலம் கட்டணங்கள் அரசுக்கு செலுத்தப்பட்டு அதற்குரிய அசல் நகல் பெறப்பட்டுள்ளது.

(i) அபிவிருத்தி கட்டணம் **ரூ.29,000/-** IOB - வங்கி மாமல்லபுரம் வங்கி கிளையில் இவ்வலுவலக கணக்கு எண்.40000 நாள்:08.07.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது.

(ii) நன்னிலைத் தொகை : **ரூ. 2,000/- SBI** திருக்கழுக்குன்றம் கிளை Treasury Chalan நாள். 13.07.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது.

(iii) அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம் **ரூ.5,23,000/-** SBI திருக்கழுக்குன்றம் கிளை Treasury Chalan நாள்.13.07.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது.

(iv) Completion certificate கட்டணம் **ரூ.19,000/- மற்றும் Display Board** ரூ.10,000/- IOB - வங்கி மாமல்லபுரம் வங்கி கிளையில் இவ்வலுவலக கணக்கு எண்.40000 நாள்:08.07.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது.

(v) Security deposit - ரூ.2,62,000/- கட்டணத்திற்கு Bank Guarantee with the validity upto 13.07.2023, Union Bank of India, West Mambalam Branch - Chennai, வங்கியிலிருந்து பெறப்பட்டதனை சமர்பித்துள்ளார்.

(vi) OSR -க்கான கட்டணம் : **ரூ. 2,58,000/-** மற்றும் Premium FSI -க்கான கட்டணம் ரூ.9,15,000/-SBI திருக்கழுக்குன்றம் கிளை Treasury Chalan நாள். 13.07.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது.

**<u>சிறப்பு நிபந்தனைகள்</u>**

1. "நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக வணிக கட்டிட அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

3. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

4. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 05013/2015 MP, நாள் 19.03.2015-ன் படி "கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (setback) வாகனம் நிறுத்தம் ஆகிய விபரங்கள் நிறுவப்பட்டிருக்க வேண்டும்".

5. Electrical Transformer room should be constructed as per the rule 46 of TNCDB rules 2019 with Satisfaction of TANGEDCO.

6. Minimum 1/3rd of total terrace area Should be reserved for erecting solar photo voltaic panels.

7. "The Tamil Nadu Government, in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Ragulation & Development) Act 2016. The promoter has to advertises, Market book sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority. If it is salable areas.

**<u>நிபந்தனைகள்</u>**

1. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், குடியிருப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

88

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் 03.11.2004-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்கவேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்

13. The provisions in the G.O.(MS)No.17 H & UD (UD 4 (3)) Department dated 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு **கானத்தூர் ரெட்டிக் குப்பம் ஊராட்சி மற்றும் கிராமம்**, தனி அலுவலர்/ ஆணையாளர், அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு, **கானத்தூர் ரெட்டிக் குப்பம் ஊராட்சி மற்றும் கிராமம்**, தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

13.7.20

உறுப்பினர் செயலர்
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்

13.7.2020

**இணைப்பு :**
திட்ட அனுமதி வழங்கப்பட்ட
வரைபடங்கள் - 2 தொகுப்பு

**பெறுநர்**
தனி அலுவலர்/ ஆணையாளர்,
**கானத்தூர் ரெட்டிக் குப்பம் ஊராட்சி மற்றும் கிராமம்,**
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**நகல்**
**M/s.Chellappas (Builders and Promoters),**
No:10/5, 2nd Floor, 50th Street,
Ashok Nagar,
Chennai - 600 083.

90

தனி அலுவலர், கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.

ந.க.எண்.1536/2020/ஆ1.

நாள்.13.08.2020

பொருள் - குடியிருப்பு கட்டிடம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி மற்றும் கிராமம், M/s.Chellappas (Builders and Promoters) என்ற நிறுவனத்தின் சர்வே எண்.103/61B-ல் வரன்முறைபடுத்திய மனைப்பிரிவு SPF No.13/2020-ல் அமைந்துள்ள மனை எண்.12-ல் (உட்பிரிவின் அளிக்கப்பட்ட மனை எண்.5-ல்) 636.35ச.மீ பரப்பு கொண்ட மனைப்பரப்பில் S + 5 Floors 1393.47ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதி அளிக்கப்பட்டது - கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம், அவர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்ட ந.க.எண்.492/2020/மாஉதிகு. நாள்.13.07.2020.
2.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ம-II)-ன் ஆய்வறிக்கை நாள்.
3.கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.37 நாள்.3 .8.2020. பலவகை ரசீது எண்.2305 நாள்.30.07.2020.

********

**உத்தரவு -**

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி மற்றும் கிராமம், M/s.Chellappas (Builders and Promoters) என்ற நிறுவனத்தின் சர்வே எண்.103/61B-ல் வரன்முறைபடுத்திய மனைப்பிரிவு SPF No.13/2020-ல் அமைந்துள்ள மனை எண்.12-ல் (உட்பிரிவின் அளிக்கப்பட்ட மனை எண்.5-ல்) 636.35ச.மீ பரப்பு கொண்ட மனைப்பரப்பில் S + 5 Floors 1393.47ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**Area Statement**

மனையிடத்தின் மொத்த பரப்பு - 636.35 சதுர மீட்டர்

| Floor Name | Total Buildup Area | Net FSI Area |
|---|---|---|
| Stilt Floor | 329.54 | - |
| Floor - 01 | 322.54 | 317.60 |
| Floor - 02 | 322.54 | 317.60 |
| Floor - 03 | 322.54 | 317.60 |
| Floor - 04 | 322.54 | 317.60 |
| Floor - 05 | 128.00 | 123.06 |
| **Total** | **1747.70** | **1393.46** |

Provided Car parking - 10 No's
Provided Two Wheeler parking - 10 No's
Plot Coverage - 51.78%
FSI - 2.189

[அனுமதி கட்டணம் ரூ.1,88,130/- (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நூற்று முப்பது மட்டும்) வங்கிவரைவாக கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி மன்றத்தில் பலவகை ரசீது எண்.2305 நாள்.30.07.2020-ல் செலுத்தப்பட்டு அதன் ரசீது நகல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கட்டிட தொழிலாளர் நலநிதி, ரூ.2,82,183/- Manual Workers General Welfare Fund of TNCWW Board என்ற பெயரில் வங்கி வரைவாக (DD No.837893, Dated 03.08.2020, City Union Bank Ltd.,) இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது].

<u>நிபந்தனைகள்</u>

1. பார்வை 1-ல் காணும் உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர்திட்டக்குழுமம், மாமல்லபுரம் அவர்களின் உத்தரவில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்ற வேண்டும்.
2. Tamilnadu Town & Country Planning Act. 1971 as mentioned specification about front set back / Rear, Side set back rules must to be follows.
3. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
4. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.
5. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
6. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதியை புதுப்பித்து கொள்ள வேண்டும்.
7. அனுமதிக்கும் வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.
8. கட்டிடம் கட்ட பொய்யான ஆவணங்கள் அளித்தது உண்மையென கண்டறியப்பட்டால், இந்த உத்தரவு இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.
9. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.
10. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே பயன்படுத்திட வேண்டும்.
11. இவ்வளாகத்தின் திட திரவ கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் வசதிகள் தங்களது சொந்த செலவிலேயே மேற்கொள்ள வேண்டும்.
12. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.
13. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படாமலிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்தும், தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலாளர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.
15. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தனி அலுவலர், கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
திருப்போரூர்.

பெறுநர்

M/s.Chellappas (Builders and Promoters),
No.10/5, 2nd Floor, 50th Street,
Ashok Nagar, Chennai - 600083.

நகல் : ஊராட்சி செயலர், கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.